பல்வேறு கோரிக்கைகளைக்கொடுத்திருக்கிறார்.துறைரீதியாகஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுடைய அதிகப்படியான கேள்வி என்னவென்றால், நான் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற அடிப்படையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் இவற்றையெல்லாம் விட்டு விட்டு, பகுதிநேரக் கடைகள் அமைக்க வேண்டும் என்றுதான் அதிகமான கேள்விகள் வருகின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் இதை எடுத்துச்சொல்லி, எங்கள் துறையின் மூத்த அதிகாரிகளை அழைத்து பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் 50 கார்டுகள், 60 கார்டுகள், 100 கார்டுகள் இருக்கின்றனவோ, கிராமங்கள் தாண்டி, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் வந்து பொருட்களை வாங்குகிறார்கள் என்றால், அதையெல்லாம் consider செய்து நகரும் கடைகளாகக் கொண்டுவருவதற்கு ஆய்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிவிரைவிலே நல்ல பதில் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

மின்மாற்றியைத் தரம் உயர்த்துதல்

***27280—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சி, 15–வது

வார்டு, சுந்தரம் காலனியில் உள்ள மின்மாற்றியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சி, 15–வது வார்டு, சுந்தரம் காலனிக்கு ஏற்கெனவே, Station Border Road–ல் உள்ள 500 KVA மின்மாற்றி வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளவாறு, சுந்தரம் காலனியில் மேலும் ஒரு புதிய 100 KVA மின்மாற்றி 15–11–2018 அன்று நிறுவப்பட்டு அதன்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அது தற்போது அந்தப் பகுதியில் நிலவிடும் மின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கேள்வி கேட்கப்பட்டதாலே அந்தப் பகுதியிலே இந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றன. முன்னாள் நகர மன்ற உறுப்பினர் திரு. சுரேஷ் அவர்களும், நலச் சங்கத்தின் நிருவாகிகளும் வைத்த கோரிக்கையை ஏற்று, மின் துறை அந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள். இன்னும் அந்தப் பகுதியிலே மின் துறை சார்பாக பல மின்மாற்றிகள் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும், விரைவாக அந்தப் பணியெல்லாம் நடைபெற்றால், தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். பழைய பெருங்களத்தூர் பகுதியிலே 33/11 KV துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு நிலம் எடுக்கப்பட்டது. அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாத ஒரு நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதுபோல, விதி 110–ன்கீழான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், தாம்பரம் மற்றும் பல்லாவரம் செயற்பொறியாளர்

அலுவலகத்தைப் பிரிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். இன்றைக்கு வேகமாக வளர்ந்து வருகின்ற பகுதிகளிலே தாம்பரமும் ஒன்று. நீங்கள் எதிர்பார்ப்பதற்கும் மேலாக, 40 சதவீதத்திற்குமேல் growth இன்றைக்கு இருக்கிறது. எனவே, அதிகமான மின் தேவை இருக்கிறது.

ஆகவே, தாம்பரம் மற்றும் பல்லாவரம் செயற்பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து, தனியாக பல்லாவரத்திற்கு ஒரு செயற்பொறியாளர் அலுவலகம் தொடங்கிவிட்டால், தாம்பரத்திற்கு போதுமான அலுவலர்கள், போதுமான அதிகாரிகள் இருப்பதால் பணி சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, சென்னை மாநகரம் முழுவதிலுமே, அதிகமான மின்தடங்களில் உள்ள மின்மாற்றிகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். தாம்பரம் பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட, 100 மின்மாற்றிகள் மாற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை வைத்திருக்கிறார்கள். 33/11 kv துணை மின் நிலையம் அமைப்பதை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் உடனடியாக ஆய்வு செய்து அந்தப் பணிகளை வேகப்படுத்துகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பல்லாவரம் மற்றும் தாம்பரம் செயற்பொறியாளர் அலுவலகங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியையும் நாங்கள் உடனே தொடங்கவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, underground cable அமைக்க வேண்டும் என்று நீண்டகாலமாக

நாங்கள் கோரிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது தாம்பரம் தொகுதியில், தாம்பரம் நகராட்சிப் பகுதி, செம்பாக்கம் நகராட்சிப் பகுதி, சிட்லபாக்கம் நகராட்சிப் பகுதிகளிலே அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைவிட வேகமாக வளர்ந்து வருகிற பகுதி பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்கரணை பகுதிகளாகும். அந்த இரண்டு பகுதிகளும் விடுபட்டிருக்கின்றன. அவற்றையும் உடனடியாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரத்தில் இப்போது விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன. கம்பங்கள் சரியில்லை, Cables எல்லாம் மிகவும் low ஆக இருக்கின்றன, பல உயிர்ச் சேதங்கள் நடந்தன என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆடு மாடுகளும் இறக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதிகமாக விபத்துகள் நடக்கின்றன. எனவே, உடனடியாக பழுதுபட்ட அந்த மின் கம்பங்களையெல்லாம் மாற்றி, எங்கெல்லாம் low ஆக wires செல்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாக மாற்றித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த தாம்பரம் பகுதியில் மட்டும் 1,230 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதைவடத்தடமாக மாற்றுவதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 353 கோடி ரூபாய் estimate—ல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பெருங்களத்தூர் பகுதியிலும், வரும் காலத்திலே—ஏனென்று சொன்னால், இப்பொழுது சென்னை மாநகரம் முழுவதுமே நாங்கள் அதை அமைக்க வேண்டுமென்பதற்காக பெரம்பூர் கோட்டத்தையும், தாம்பரம் கோட்டத்தையும் எடுத்திருக்கின்றோம். அடுத்தகட்டமாக அந்தப் பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கம்பங்கள் சேதமடைந்திருக்கின்றன, மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்று சொன்னார்கள். நான் மானியக் கோரிக்கையிலேயே சொன்னேன். கிட்டத்தட்ட 6,500 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய

மின் கம்பிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 35,000 மின் கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் தாழ்வழுத்தக் கம்பிகள் இருந்தனவென்று சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு நான் கேட்ட கேள்வி குறித்த கோரிக்கை. RMU எனப்படுகின்ற Ring Main Units அமைக்கும் புதிய திட்டம் இரண்டாண்டு காலமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிக்கையிலேயே, ஒட்டுமொத்தமாக சென்னையிலே இருக்கின்ற pillars பொருத்தப்பட்ட உயர் மின்னழுத்த மாற்றிகளை மாற்றி, RMU அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். துறைமுகம் தொகுதியில் 300 மின்மாற்றிகள் இருக்கின்றன. அவை காலப்போக்கில் மாற்றப்படும் என்று அறிவித்து 2 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆகவே, மீண்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மின்மாற்றிகளை மாற்றி, RMU–Ring Main Unit என்கின்ற அந்த latest technology கொண்ட மின்மாற்றிகளை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். இது 2017 ஆம் ஆண்டு கேட்ட கேள்வி என்பதை நினைவுபடுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது உண்மை. 2017–ல் tender–ஒப்பந்தம் கோரப்பட்டு, சிலர் நீதிமன்றம் சென்ற காரணத்தினால் அது இப்பொழுதுதான் முடிந்து, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்தப் பணிகள் முடிந்து, பணிகள் துவங்கும். விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.